**சரியான விடை Mdu I Revision Commerce Jan 2016**

1.(இ) கூட்டுப்பங்கு நிறுமம்
2.(இ) ஒரு நபர் மட்டும் தேவை
3.(அ) விரைவாக
4.(அ) ஒப்பந்தத்தால்
5.(ஈ) சட்டமுறை நிறுமம்
6.(இ) காளை
7.(ஈ) 25
8.(ஈ) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்
9.(இ) பொது வரையறை நிறுமங்கள்
10.(இ) ஊக்கப்படுத்துகிறது
11.(ஈ) நெகிழ்ச்சி தன்மையற்றது
12.(அ) வரையறுத்த கூட்டாண்மை
13.(இ) 7
14.(அ) கடனாளர்கள்
15.(ஆ) 15
16.(அ) மேலாண்மை இயக்குநர்
17.(ஆ) 21
18.(ஆ) மாவட்ட தலைநகரங்களில்
19.(அ) 51%
20.(ஈ) 18

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. தனியாள் வணிகம்
22. துறைமுறை அமைப்பு
23. இணைவினை
24. வரையறா பொறுப்பு
25. இயக்குநர் அவையால்
26. கடனாளர்கள்
27. இராபர்ட் ஓவன்
28. மக்களாட்சி தன்மை
29. நாட்டுடைமையாக்கம்
30. எழுத்து
31. 5000
32. 20
33. குவிவு முன்னுரிமை
34. செயல்முறை விதிகளில்
35. 2
36. முனைம வேட்டையாளர்கள்
37. புதிய
38. சிறப்பு
39. சமூக நலன் / பொது நலன்
40. உடைமை

**ஏதேனும் 10 வினாக்கள் 10X4=40**

**41.அமைப்பு** ஆலன்லூயி அவர்களின் கூற்றுபடி செய்ய வேண்டிய பணியினை அறிந்து அதனை தொகுதிகளாக பிரித்தலும் குறிக்கோள்களை அடைய பணியாளர்களால் பயன்தரு முறையே உழைக்கும் நோக்குடன் அவர்களுக்கிடையே உறவு முறைகளை ஏற்படுத்தும் பொறுப்பையும் ஆணையுரிமையையும் வரையுறுத்தி வழங்களையும் அமைப்பு என்ற சொல் குறிக்கும்

**42.அரசுத் தொழில்களை உருவாக்குதல்** அரசே முதலீடு செய்து புதிய தொழில் நிறுவனங்களை அமைத்து மேலாண்மை செய்யலாம். ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் வணிக அமைப்புகளை நாட்டுடைமையாக்கி அரசு தொழில்களாக அவை செயல்படுமாறு செய்யலாம்.

**43.வரையறா பொறுப்பு:**தொழிலின் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில் தனது சொந்த சொத்துக்களை இழக்க நேரிடும். அதாவது கடனீந்தோருக்கு உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு

**44. கர்த்தா** இந்துக் கூட்டுக் குடும்பத் தலைமை உறுப்பினர் ஆவார்

**45. உழையாக் கூட்டாளி:**இவ்வகை கூட்டாளிகள் தொழிலில் முதலிடுவர். ஆனால் தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவதில்லை. இவ்வகை கூட்டாளிகள் உறங்கும் கூட்டாளிகள் அல்லது உழையாக் கூட்டாளிகள் அல்லது முதலிடும் கூட்டாளிகள் என அழைக்கப்படுவர்.

**46.கூட்டாண்மை** (ஏதேனும் ஒரு இலக்கணம்) 1932 ஆண்டு இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் 4வது பிரிவின்படி "எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்துகொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு"

**47. பங்கு முனைமம்:** ஒரு நிறுமத்தின் பங்குகளின் வெளியீட்டு விலை முகமதிப்பை விட அதிகமாக இருக்கும். வெளியீட்டு விலைக்கும், குறைவாக உள்ள முகமதிப்பிற்கு உள்ள வேறுபாடு முனைமம் என்று சொல்லப்படுகிறது.

**48.அயல்நாட்டு நிறுமம்** இந்தியாவுக்கு அப்பால் (வெளிநாட்டில்) பதிவு செய்யப்பட்டு ஆனால் இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம்.

**49.பகராள் :** கூட்டத்தில் கலந்துகொள்ள உறுப்பினரால் நியமிக்கப்படும் ஒரு நபரை குறிக்கும். பகராளை நியமிக்கும் பத்திரத்தையும் கூட பகராள் எனும் சொல் உணர்த்தும்.

**50.கூட்டத்தில் குறைவெண் :** ஏதேனும் பொருள் குறித்துச் செல்லத்தக்க வகையில் தீர்மானம் நிறைவேற்ற நடைபெறும் நிறுமக்கூட்டத்தில் நேரடியாகக் கலந்துகொள்ள வேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கையே

**51.பட்டியலிடுதல் :** பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் பத்திரங்களைச் சேர்ப்பதே ஆகும். பொது நிறுமங்களுக்கு பட்டியலிடுதல் கட்டாயம் ஆகும்

**52.செபி:** இந்தியப் பங்கு சந்தையின் வளர்ச்சிக்காகப் பங்கு மாற்றகங்களின் செயல்களை ஒழுங்குபடுத்த சுதந்திரமான ஒரு தனி அமைப்பின் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டுவருதல் அவசியமாகிறது. எனவே மத்திய அரசு இந்திய பத்திர மற்றும் மாற்றகங்களின் வாரியத்தை ஏற்படுத்தியது.

**53.கூட்டுறவுச்சங்கம்:** H.C. கால்வேர்ட் - உறுப்பினர்களின் பொருளாதார நலனை பெருக்கிக் கொள்வதற்ககாக மனிதன் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே ஆகும்.

**54.இராக்டேல் முன்னோடிகள்:** இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை 1844ம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் தொடங்கினார். இது முதன்முதலாக தொடங்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும்.

**55. அரசு நிறுமம் :** ஒரு நிறுமத்தின் செலுத்தப் பெற்ற பங்கு முதலில் 51 விழுக்காடுக்கு குறையாமல் மத்திய (அ) மாநில அரசு வைத்திருக்குமேயானல் அதனை அரசு நிறுமம் எனலாம்.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி :5X8=40**

**56. இந்து கூட்டக்குடும்ப வணிகம் :**

**இந்துகுடும்பவணிகத்தில்ஒரேகுடும்பத்தில்பிறந்தவாகள்உறுப்பினாகள்அவர்கள்சொத்துகள்அனைத்தும் கூட்டுச்சொத்தாகும்.குடும்பத்தலைமைஉறுப்பினருக்கு காத்தாஎன்றுபெயர்.**

**தலைமைஉறுப்பினரால்குடும்பவணிகம் நடத்தப்படுகிறது.விவசாயம்கைத்தொழில்கள்சிறுதொழிற்சாலைபோன்றதொழில்களில்ஈடுபடுவர்கள்.இந்து** வாரிசு **சட்டம்**1956 **ஒருகூட்டு** உரிமை **மரணம் அடைந்தபின் அவரின் வாரிசுதாராகள் சொத்தின்உரிமையுள்ளவராகிறார்கள்.** 1985**ஆம் ஆண்டிலிருந்து இச்சட்டம்மகனைப்போலவே மகளுக்கும் சமஉரிமை வழங்கிவருகிறது.**

**57. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம் :**

1. **நிறுவனத்தின் பெயர்** 2. **ஒப்பந்த நாள் மற்றும் தொழில் புரியும் இடம்** 3. **கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி** 4. **நிறுவனம் மேற்கொள்ள இருக்கும் தொழிலின் தன்மை** 5. **கூட்டாண்மையின் காலவரையறை** 6. **ஒவ்வொரு கூட்டாளியும் வழங்கிய முதல் தொகை** 7. **ஒவ்வொரு கூட்டாளியும் நிறுவனத்திலிருந்து எடுக்கும் தொகை.** 8. **இலாப பகிர்வு விகிதம்** 9. **உழைக்கும் கூட்டாளிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியம்** 10. **முதல் மற்றும் எடுப்பு மீது வட்டி** 11. **கூட்டாளிகள் சேரும்போது விலகும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை** 12. **நிறுவனக்கலைப்பின்போது கணக்குகளை தீர்த்துக் கொள்ளும் வழிமுறை** 13. **கணக்கு ஏடுகளை பராமரித்தல் மற்றும் தணிக்கை** 14. **கூட்டாளிகள் நிறுவனத்திற்கு தந்திடும் கடன் மற்றும் முன்பணம் மீதானவட்டி** 15. **நற்பெயரை மதிப்பிடும் முறை** 16. **கூட்டாளி தகராறுகளை தீர்க்க நடுவர் தீர்ப்பிற்கு விடும் முறை.**

**58. அமைப்புமுறையேட்டின் உள்ளடக்கம் யாது ?**

**அமைப்பு முறை ஏடு:** நிறுமத்தின் செயல்பாட்டு எல்லைகளை நோக்கங்களை வரையறுத்து காண்பிப்பது. நிறுமத்தின் பெயர் பதிவலுவலகம் உள்ள இடம் அனுமதிக்கப்பட்ட பங்குமுதல் நோக்கங்கள் போன்றவற்றை உள்ளடக்கியிருப்பது. உரிய பத்திரத்தலைகள் ஒட்டப்பட்டிருக்க வேண்டும். முறைப்படி கையொப்பமிட்டிருப்பதுடன் சாட்சிகளின் கையெழுத்தும் உடையதாக இருக்கும். **அ)பெயர்குறித்த உட்பிரிவு** :நிறுமத்தின் பெயர் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். **ஆ)நோக்கம் குறித்த உட்பிரிவு** :நிறுமம் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகள் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உட்பிரிவாய் கருதப்படுகிறது.இதில் குறிப்பிடாத எச் செயலிலும் நிறுமம் ஈடுபடக்கூடாது. **இ)இடங்குறித்த உட்பிரிவு** :பதிவு அலுவலகம் அமைந்துள்ள மாநிலத்தின் பெயர் இங்கு கொடுக்கப்பட்டிருக்கும். **ஈ)பொறுப்பு குறித்த உட்பிரிவு :** இப்பிரிவில் தான் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. பொறுப்புறுதி நிறுமமாயின் அது கலைப்பக்குள்ளாக நேரிடும். பொது நிறுமச் சொத்தகள் அதன் கடன்களை அடைக்க போதுமானதாக அல்லாத நிலையில் ஒவ்வொரு உறுப்பினரும் கொண்டுவருவதாக உறுதி உடுத்துக்கொண்ட தொகை குறிப்பிடப்படும். **உ)முதல் குறித்த உட்பிரிவு** :எப்பங்கு முதலுடன் நிறுமம் பதிவு செய்யப்படுகிறது. என்ற விவரமும் முதல் தொகை குறிப்பிடப்பட்ட மதிப்புடைய பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ள விவரமும் கொடுக்கப்படுகின்றன.

**59.**

| **வ. எ ண்** | **அடிப்படை** | **பங்குகள்** | **கடனீட்டுப்பத்திரங்கள்** |
|---|---|---|---|
| 1. | பொருள் | ஒரு நிறுமத்தில் பங்கு முதலீல் ஒரு சிறு கூரே பங்காகும் எனவே பங்குநர் நிறுமத்தின் உரிமையாளர் நிலையில் இருக்கிறார் | கடனீட்டுப்பத்திரங்கள் நிறுமத்திற்கு கொடுத்த கடனை உறுதிபடுத்தும் சான்றாகும்கடன் பத்திரதாரர் நிறுமத்தின்கடனாளர்ஆகிறார் |
| 2. | இலாபத்தை வழங்குதல் | போதுமா லாபம் ஈட்டினால் மட்டுமே பங்குனர் கட்குபங்காதாம் வழங்கப்படும். | குறிப்பிட்ட கால இடைவெளிகளில் லாப நட்டத்தை கருதாமல் கடனீட்டு பத்திரத்தின் மீது வட்டி வழங்கப்படுகிறது. இயக்குநர் முடிவால்இதனை மாற்ற முடியாது |
| 3. | இலாபத்தின் அளவு | முற்றுரிமை பங்கட்கு குறிபிட்ட விதத்தில் நிலையான பங்காதயம் ஆனால் நேர்மை பங்குகட்கு கொடுக்கப்படும் பங்காதாய விகிதம் லாபத்திற்கேற்ப மாறக்கூடியது | குறிப்பிட்ட விதத்தில் வட்டி செலுத்தப் பெறும் இலாத்தின் அளவை ஒட்டி வட்டிவீதம் மாறாது. |
| 4. | இயக்குநர் ஒப்புதல் | லாபம் ஈட்டுறுப்பினும் இயக்கநர்அவை பரிந்துரைத்து ஆண்டுபொதுக் கூட்டத்தில் தீர்மானத்தின் மூலம் விளம்பப்பட்டால் மட்டுமே பங்காதாயம் வழங்கப்படும் | கடனீட்டுப்பத்திர வட்டி செலுத்துவதற்கு எவருடைய பரிந்துறையும் ஒப்பதலும் வேண்டியதில்லை |
| 5. | லாபத்தை வழங்குதல் | பங்காதாயம் லாபப்பகிர்வு ஆகும் | கடனீட்டுப்பத்திர வட்டி லாபத்தின் மீதான செலவாகும். |
| 6. | பொறுப்பு | பங்குநர் ஒருவர் பொறுப்புதான் வைத்துள்ள பங்குகள் மீது செலுத்த பெறதிருக்கும் தொகை அளவே ஆகும். | ஆத்தகைய பொறுப்பு ஏதும் கடனீட்டு பத்திரதாரர்களுக்கு இல்லை |
| 7. | வட்டத்தில் வெளியிடுதல் | நிறுமச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் நிறுமம் பங்குகளை வட்டத்தில் வெளியிடலாம் | கடனீட்டபத்திரங்களைவ ட்டத்தில் வெளியிட அத்தகைய நிபந்தனைகள் ஏதுமில்லை |
| 8. | சொத்துகள் மீது பிணை | நிறுமச் சொத் துகள் மீது பங்குநர்கட்கு ஈடுஏதுமில்லை | கடனீட்டு பத்திரங்கள் பொதுவாக சொத்துகள் பிணையாக பெற்றிருக்கும் |

**60. முதலீட்டார் ஊகவணிகர் வேறுபாடு :**

| முதலீட்டாளர்கள் | ஊகவணிகர்கள் |
|---|---|
| 1.முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவார்கள் | முதலீகளின் மதிப்பை அதிகரிப்பதிலும் லாபம் பெறுவதிலும் குறியாக இருப்பர் |
| 2.முதலீடுகளின் மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவர் | பத்திரங்களை வாங்கி விற்பதின் மூலம் கிடைக்கும் லாபத்தையே விரும்புவர் |
| 3.இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| 4.நிலையான வருவாய் | நிலையான ஆதாயம் |
| 5.நீண்ட காலம் ஈடுபாடும் பொறுப்புடையது | குறுகிய காலம் ஈடுபாடும் பொறுப்புடையது |

**61.கூட்டுறவு அமைக்க பின்பற்ற வேண்டிய முறைகள் :** கூட்டுறவு சங்கச் சட்டம் 1912ன் படி அல்லது மாநில கூட்டுறவு சங்கத்தின் படி ஒரு சங்கம் பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு ஊரைச் சேர்ந்த பொதுநலம் உள்ள ஏதேனும் 25 நபர்கள் கூடி கூட்டுறவுச் சங்கத்தை தோற்றுவிக்கலாம்.
கூட்டுறவுச் சங்கப்பதிவாளரிடம் சங்கம் அமைக்க இருக்கும் விருப்பத்தை விண்ணப்படிவ மூலம் தெரிவிக்க வேண்டும். அந்த விண்ணப்ப படிவத்திற்கு அமைப்பு முறையேடு என்று பொயர். அதில் சங்கத்தின் பெயரும், விலாசமும், நோக்கங்களும், முதல் உறுப்பினரின் பொறுப்பு ஆகியவற்றை குறிக்கவேண்டும். விண்ணப்பத்துடன் சங்கத்தின் துணை விதிகளையும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இணைத்திருக்க வேண்டும். மேலாண்மை செய்யும் முறை கூட்டம் நடைமுறைகள் தீர்மானங்கள் ஆகியவற்றை துணை விதிகளில் குறிப்பிட வேண்டும்.பதிவாளர் பத்திரங்களை முறையாக பரிசீலித்து அவை சட்டப்படி உள்ளனவா என்பதை ஆய்வு செய்வார்.அவர் முழு திருப்தியடைந்தவுடன் சங்கத்தினுடைய பதிவேடுகளில் கூட்டுருவாக்க பதிவு சான்றிதழைக் கொடுப்பார்.இச்சான்றிதழ் கொடுத்த பின் அச்சங்கம் சட்ட உருவைப் பெற்று தனி ஆளுமையைப் பெறுகிறது.

**62.ஆண்டுப்பொதுக்கூட்டம்:**நிறுமம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து 18 மாதங்களுக்குள் நிறுமத்தின் முதல் ஆண்டுப் பொதுக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும். பின்னா் இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்கட்கிடையே உள்ள கால இடைவெளி 15 மாதங்களுன்னு மிகாமல் இருத்தல் வேண்டும். இக்கூட்டத்தின் மேற்கொள்ளப்படும் சாதாரண நடவடிக்கைகள்.

1. ஆண்டுகணக்குகள் இயக்குநர் மற்றும் தணிக்கையர் அறிக்கைகளை விவாதித்து பெற்றுக் கொள்ளுதல்.
2. பங்காதாயம் விளம்புதல்
3. பதவி விலகும் இயக்குநர் இடங்களில் இயக்குநர்களை நியமித்தல்.

தணிக்கையரை நியமித்து, அவருடைய ஊதியத்தையும் நிர்ணயம் செய்தல்

**63.பொதுகழகத்தின் இயல்புகள் :**

**1.தனித்தியங்கும் சட்டத்தன்மை:** இது அதற்கென மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிசட்டத்தால் தோற்றுவிக்கப்படும்.

**2.நீடித்த நிலைத்தன்மை:** இது நிறுமத்தைப்போன்று பொது முத்திரை மற்றும் நிலைத்தன்மையையும் பெற்றிருக்கும்.தனது பொது முத்திரையின் கீழ் ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம்.

**3.அரசு முதலீடு:** அதற்கு தேவையான முதல் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது.சில பொது கழகங்களில் தனியார் முதலீடு செய்யப்படும் நிலையிருந்தால் குறைந்த பட்சம் 51 விழுக்காடு பங்குகளை வைத்திருக்கும்.

**4.நிதிதன்னாட்சியுரிமை:** அன்றாட நடவடிக்கைகளுக்கு தேவையான நிதிக்காக இந் நிறுவனங்கள் அரசை சார்ந்திருப்பதில்லை. தேவைப்பட்டால் பொதுமக்களிடம் அல்லது அரசிடம் கடன் பெறலாம்.

**5.நிர்வாகம்:** பொது கழகம் இயக்குநரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது.தகுதி திறமை அனுபவம் கருதி இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.

**6.சேவை நோக்கம்:** இது இலாப நோக்கு இல்லாமல் சேவை நோக்கை கொண்டு செயல்படும். அதாவது சரக்கு அல்லது பணியிணை நியமான விலையில் அளிக்கும் நோக்கில் செயல்படுகிறது.

**7.பணியாளர்கள்**: பணியாளர்கள் அரசு ஊழியர்கள் அல்ல. அக்கழகமே அவர்களின் பணியமர்த்தல் சம்பளம் இன்ன பிறப் பணிகளை தீர்மானிக்கும்.

**8.உரிமை மற்றும் கடமை:** இதைப்படைக்கும் சட்டமே உரிமைகள் கடமைகள் பொறுப்புகள் ஆகியவற்றை தெளிவாக முடிவு செய்யும்.

**9.அரசு தலையீடின்மை:** இதன் அன்றாட அலுவல்களில் அரசு தலையிடாது. சுதந்திரமாக தம் கொள்கைகளை கழகங்கள் செயல்படுத்தலாம்.

**10.தன்னாட்சியுரிமை:** இக்கழகங்களுக்கு நிதி மேலாண்மையில் தன்னாட்சியுரிமை உள்ளது.இயக்குநரவையால் தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களுக்காக இந்நிறுவனங்கள் தங்கள் நிதியினை பயன்படுத்தலாம்.

**11.பதில் சொல்லும் கடமை**: இக்கழகங்களுக்கு பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்திற்கும் அத் தொழில் சார்ந்த அமைச்சரகத்திற்கும் பதில் சொல்லும் கடமை உண்டு.

**12.தொழில் கொள்கை:** லாபம் ஈட்டுவது முதன்மை நோக்கம் இல்லாமலிருப்பினும் கழகங்கள் தொழில் கண்ணோட்டத்தோடு இயங்குகின்றன.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 4X20=80**

**64.அ)அமைப்பின் கோட்பாடுகளை விவரிக்க.**

**1.நோக்கங்களின் ஒருமை : அமைப்பின் குறிக்கோள்கள் தெளிவாக முடிவு செய்யப்பட வேண்டும். நோக்கம் இலக்கினை அடையக்கூடியதாக இருக்க வேண்டும்.**

**2. வேலைப் பகிர்வு : அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிட வேண்டும். இதன்மூலம் மொத்த பணிச்சுமை உணரப்படும். இது பகிர்வு செய்யப்பட வேண்டும். இதுவே துறைப்படுத்தல் ஆகும். 3. கட்டுப்பாட்டு வீச்செல்லை : ஒரு அதிகாரி எத்தனை கீழ்பணியாளர்களை சீரிய முறையில் நிர்வகிக்க முடியும் என்ற எல்லையே கட்டுப்பாட்டு வீச்செல்லை எனப்படும். ஒர் உயர் அலுவலர் தனக்கு கீழ் உத்தம எண்ணிக்கையில் கீழ்பணியாளர்களை மேற்பார்வை செய்வதே அமைப்பின் திறனை மேம்படுத்தும். 4. தரவரிசைக் கோட்பாடு : ஆணையுரிமையின் வரிசை**

உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ் நோக்கி வர வேண்டும். இது "கட்டளை இணைப்பு" என்றும் அழைக்கப்படும். 5. கட்டளையொருமை : ஒரு பணியாளர் ஒரு அதிகாரியிடமிருந்தே ஆணைகளை பெறும் வகையில் அமைப்பு இருக்க வேண்டும். இரண்டு அதிகாரிகளின் கீழ் ஒருவர் பணியாற்றும் நிலை எழுந்தால் யாருடைய ஆணையை நிறைவேற்றுவது என குழப்பம் ஏற்படும், இதன் விளைவாக குழப்பமும், ஒழுங்கின்மையும் ஏற்பட வாய்ப்பு அதிகம். 6. பணி வழி வரைவிலக்கணம் : ஒரு பணியாளரின் ஆணையுரிமையும் பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம். ஒவ்வொரு பணியாளருக்கும் இடையே உள்ள தொடர்புகள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். 7. ஒருமுனை இயக்கம் : ஒவ்வொரு குழு நடவடிக்கைகளின், தொகுதியின் நோக்கங்கள் வெற்றியடைய ஒரு தலைமையும் ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும். அமைப்பின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், பணிகளை நிறைவேற்றவும் இது அவசியம். 8. ஒருங்கிணத்தல் : விரும்பும் இலக்கினை அடைய நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு துறையும் மற்ற துறைகளுடன் அடிக்கடி கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். இலாபம் அதிகரிக்க கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். 9. அதிகார ஒப்படைவு : ஓர் உயர் அதிகாரி தனக்கு கீழ் உள்ள பணியாளரிடம் சில பணிகளை ஒப்படைக்கிறார். இதை நிறைவேற்ற தேவையான அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்க வேண்டும். கீழ் பணியாளர் தனது மேலதிகாரிக்கு பொறுப்பாகிறார்.10. பொறுப்பு கோட்பாடு : ஒரு மேலதிகாரி தனக்குக் கீழ்பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்கு பொறுப்பாகிறார்.

அலுவலர் தனது மேலதிகாரிக்குப் பொறுப்பாகிறார். 11. நெகிழ்வுத்தன்மை : மாறும் சூழ்நிலைக்கேற்ப அமைப்பும் மாறக்கூடிய வகையில் இருக்க வேண்டும். சீர்குலைவு ஏதுமின்றி விரிவுபடுத்தக்கூடிய வகையில் அமைப்பு இருத்தல் வேண்டும். இதுவே நெகிழ்வுத்தன்மையாகும்.

12. திறமை : அமைப்பின் வெற்றிக்கு திறமையே திறவுகோல். திறமை பயிற்சி மூலம்மேம்படுத்தப்படலாம். குறிக்கோள்களை குறைந்த செலவில் அதிக பலனுடன் நிறைவேற்ற திறமை பயன்படும். 13.தனித்திறமை : அமைப்பு தனிநபர் திறமை தொடர்பானது. எனவே,
பணியாளர் தேர்வு, இட அமர்வு, பயிற்சி அவசியமாகிறது.

அமைப்பு மனிதவளத்தை உத்தம அளவில் பயன்படுத்தி வளர்ச்சித்திட்டங்களை ஊக்கமடையச் செய்ய வேண்டும்.

14. எளிமை : அதிகார படிநிலை மட்டங்கள் அதிகமாக இருந்தால் செய்தித் தொடர்புகளில் சிக்கலும், குழப்பமும், மோதலும் ஏற்படும். ஒருங்கிணைப்பு முடியாது போகலாம். எனவே, எளிமையான படிநிலைகள் அமைக்கப்பட வேண்டும்.

**64.ஆ.அரசு தொழில்களின் நோக்கங்கள் :**

**1.பல்வகைஉற்பத்தி செய்ய உதவுவது:** இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர்.லாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும் முதலீடு செய்ய விரும்புவர்.லாப வாய்ப்புகள் அதிகம் இல்லாத அதே சமயம் நாட்டுக்கு தேவையான தொழிகளின் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.தனியார் துறை மேற்கொள் அஞ்சும் தொழிகள் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.

**2.அடிப்படை தொழிகளின் வளர்ச்சி :** பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படை தொழிகள் எனலாம்.எடுத்துக்காட்டாக இரும்பு எ.்கு ஆலைகள் வேதிய தொழில்கள் போன்றவை அடிப்படை தொழிகள்ஆகும். இத்தகைய தொழிகள் அரசு தொழில்கள் அரசு தொழில்களாகவே இருப்பதே சால சிறந்தது.

**3.பேரளவு முதலீட்டு நிறுவனங்கள்:**
சிலதொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்ய விரும்பும் மேலும் அந் நிறுவனங்கள் தொழில் உற்பத்தி தொடக்க காலம் நீண்டதாக இருக்கும்' தனியார் தொழில் முனைவோர் கலால் பேரளவு முதலீட்டினை அளிக்க முடியாது.எடுத்துக்காட்டாக இரயில் கப்பல் கட்டுவது மின்சக்கி ஆகிய தொழிகளுக்க தேவையான பேரளவு முதலீட்டினை தனியார் முதலீட்டினால் அளிக்க முடியாது.

**4.இன்றியமையாத வசதிகளை நல்குவது:** குடிநீர் மின் உற்பத்தி மின்சக்தி எரிவாயு போக்குவரத்து தகவல் தொடர்பு போனடறவை நாடு முழுவதும் அன்றாட தேவைப்படும் இன்றியமையாத வசதிகள் ஆகும் இத் தேவைகள் மிக குறைந்த விலையில் பூர்த்தி செய்ய வேண்டும். எனவே இவ்வசதிகளை செய்து தரும் அமைப்பகள் அரசு தொழிகள் ஆகவே இயங்க வேண்டும்.

**5.முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்தவது:** ஒரு நாட்டை அயல் நாடுகளின் தக்குதலில் இருந்து காப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.நாட்டின் பாதுகாப்பு சார்ந்த தொழிகள் தனியார் வசம் இருந்தால் ஒரு நெருக்கடி ஏற்படும் பொழுது அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் நல்காமல் போகும் நிலை உருவாக வாய்ப்பு உண்டு.அல்லாமலும் அவர்களட நாட்டின்பாதுகாப்பு குறித்த ரகசியங்களை எதிரி நாடுகளுக்கு சொல்லக்கூடிய அபாயமும் இருக்கிறது.

**6.அனைத்து பகுதிகளிலும் சமமாக பொருளாதார வளர்ச்சி பெறுதல்:**தொழில் உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் நாட்டிற்கு தேவையான அனைத்து உற்பத்தி தொழில்களை ஏற்படுத்துவதே ஆகும் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சமச்சிரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.தனியார் துறையினர் லாபம் ஈட்ட வாய்ப்ப உள்ள அவர் நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்கவிரும்பியதில்லை.

**7.இயற்கை வளங்கள் தோன்றி எடுத்தல்:** நாட்டின் இயற்கையாக கிடைக்கும் பொருட்கள் வளங்களை தோன்றி எடுக்கும் தொழிகளில் முதலீடு செய்வதே நட்டத்தை ஏற்று கொள்ள தனியாா துறை விரும்புவதில்லை. இந்தியாவில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கமிசன் புதுத்தோற்று வாய்களை கண்டுபிடிப்பதற்காக பேரளவு தொகைகளை செலவிடுகிறது.

**8.பொருளாதார வலிமை** செரிவடைவதை தடுத்தல்:
உற்பத்தியானது தனியாரிடம் முழுவதுமாக இருந்தால் தங்களுடைய லாபத்தை அதிகரிப்பதற்காக அவர்கள் பொது மக்களையும் நுகர்வோரையும் சுரண்டுவர் தனியார் துறை அவ்வாறு லாப நோக்கோடு செயல்படும்

போது அதன் விலைவாக பொருளாதார வலிமை அவற்றிடம் மேலும் செறிவடைவதையும் நாம் அறிவோம்.

**9.நிறைவேலைவாய்பை உறுதிபடுத்துதல் :**
நிறைவேலைவாய்பு பொது உடமை உற்பத்தியினாலே நாடுகள் கூட வேலைவாய்பை பெறுவதில்லை .நாட்டில் உள்ள வழங்கள் நன்கு பயன்படுத்தப் பட்டால்தான் பொருளதாரவளர்ச்சி விரைவாக ஏற்படும்.இதற்கு அரசு பொருளாதார துறை கவனம் செலுத்தி திட்டங்கள் தீட்ட வேண்டும்.

**10.அரசின் வருவாயை பெருக்குதல்:** சில அரசு நிறுவனங்கள் வணிக கொள்கைகளின் அடிப்படையில் செயல்படும்.அந்நிறுவனங்களில் வருவாய் அரசு கருவுலத்தில் சேர்க்கப்படும்.இவ்வாறு அரசின் நிதிநிலைமை மேம்படுத்தப்பட்டு பொருளாதார முக்கிய துவம் வாய்ந்த திட்டங்களை நிறைவேற்ற பயன்படுத்த படுகிறது இது மக்கள் வாழ்க்கை தரம் உயர்த்த உதவும்.கல்வி மருத்தவம் வீடு போன்றவை பொது நல பணிகளுக்கம் இவ்வருவாய்செலவிடப்படுகிறது.

**65)அ) தனிநபர் வணிகத்தின் குணாதிசியங்கள்:**

1)**தனிநபர்உரிமையும்கட்டுபாடும் தனிநபர் ஒருவரே இதன்உரிமையாளர்.எனவே அவரே உரிமையாளராகவும் தலைவராகவும்யாருடையகுறுக்குஇல்லாமல்சுந்திர மாகவியாபாரத்தைநடத்துகிறார்.அதனால்தனியாள்வ ணிகத்தின்உரிமையும்கட்டுப்பாடும்அவர் வசமேஉள்ளது.**

2)**மூலதனம்: தனியாள்வணிகத்தில்அவரேமுதலீடு செய்கிறர். இம்முதல்தன்சொந்தசேமிப்பிலிருந்தோ அல்லதுநண்பாகள்உறவினாகள்மற்றும்நிதிநிறுவனங் களிடமிருந்தோகடனாபெற்றுமுதலீடுசெய்யலாம்.**

3)**வரையறாபொறுப்பு: இவரின்பொறுப்பு வரையறுக்கப்படாதது.வியாபாரகடன்களுக்குதொழி லின்சொத்துகள்போதுமானதாகஇல்லாவிட்டால்தனது சொந்தசொத்திலிருந்துஅக்கடன்களைதீர்க்கவேண்டு ம்.**

4)**இலாபநட்டம்:வியாபாரத்தில்கிடைக்கும்இலாபம் முழுவதும்தனிவணிகரையேசேரும். அவர்பிறருடன் பங்கிட்டுக்கொள்ளதேவையில்லை.அதுபோலநட்டம்ஏ ற்பட்டால்அந்தநட்டம்முழுவதையும்அவரேஏற்கவே ண்டும்.**

5)**சட்டத்தனித்துவமின்மை: தனியாள்வணிகத்தில் உரிமையாளரையும்தொழிலையும்சட்டம்ஒன்றாகக்க ருதுகிறது.உரிமையாளரோஅவரேநிர்வாகம்செய்கிறா ர்.கூட்டுப்பங்குநிறுமத்தைப்போல்உரிமையும்நிர்வாக மும்பிரிக்கப்படவில்லை.**

6.**தனிச்சட்டம்மில்லை:கூட்டாண்மைசட்டம்கூட்டாண் மைக்கும்இந்தியநிறுமங்கள்சட்டம்நிறுமத்திற்கும்இந் தியகூட்டுறவுச்சட்டம்கூட்டுறவுசங்கங்களுக்கும்இருப் பதைப்போலதனியாள்வணிகத்திற்குதனிச்சட்டம்ஏது வும்இல்லை.**

7)**பதிவு:- தனியாள்வணிகத்தைபதிவுசெய்ய வேண்டியதில்லைசிலவகைத்தொழில்களைமேற்கொ ள்ள உள்ளாட்சிநகராட்சிமற்றும்மாநகராட்சியிடமிருந்து உரிமம்பெறவேண்டும்.**

8)**வாழ்வு: நிறுமம்போன்றுஇதற்குநீடித்தவாழ்வு கிடையாது. தனியாள்வணிகரின்வாழ்வைப்பாதிக்கும் எதுவும்அவருடையதொழிலையும்பாதிக்கும்.அவரு டையஇறப்பு(அ)தொழில்திறமைஇழத்தல்(அ) அவருக்கு வாரிசுஇல்லாமை போன்றவை தொழிலை முடிவுக்குகொண்டுவரும்.**

9)**எளிமைஇதைதொடங்குவதும்கலைத்தலும்மிகவும் எளிது. இவ்வணிகத்தைகலைக்கசட்டவிதிகளைபினபற்ற தேவையில்லை.**

10**உள்ளுர்வியாபாரம்:இவ்வணிகம்ஒருகுறிப்பிட்டப்பகு தியில்மட்டுமேநடைபெறும். சிலவகைத் தனிவணிகங்கள் கிளைகளுடன்சிலஇடங்களில்நடைபெறும்.**

**65.ஆ)செபின் நோக்கம் இயல்பு பணிகள் அதிகாரம் நோக்கம் :**

**1.முதலீட்டாளர்களின் நலநனை பாதுகாத்தல்**

**2.பத்திரச்சந்தை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துதல்.**அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்துதல் அதனை சார்ந்த நடவடிக்கைகளியின் ஈடுபடுதல்.1992 ல் வாரியமாக செபி ஏற்படுத்தப்பட்ட போது அடைதரகர்களின் செயல்கள் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல் உள்வணிகத்தை தடைசெய்தல் பங்குகளின் ஏலத்தை நடைமுறைக்கோட்பாடுகள் உருவாக்கி நாணயமாக நடக்கச் செய்தல் ஆகிய பணி இதற்கு இருந்தது.

**இயல்புகள்:**
1.செபிச்சட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்ட நீடித்த வாழ்வு மற்றும் பொது முத்திரை கொண்ட ஒரு கூட்டுருவாக்கம் ஆகும்.
2.செபின் தலைமை அலுவலகம் மும்பையில் உள்ள கிளை அலுவலகங்கள் இந்தியாவில் மற்ற நகரங்களிலும் விளங்கும்.
3.(அ)சபைத்தலைவர்கள்
(ஆ)நிதி மற்றும் சட்டஅமைச்சக அலுவலர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2 உறுப்பினர்கள்
(இ)ரிசர்வ் வங்கி அலுவலர்களழிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர்
(ஈ)மேலும் 2 உறுப்பினர்கள் சபைத்தலைவர்கள் மற்றும் வாரியத்தின் 5 உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுவர்.
4.செபின் பொது கணிப்ப வழிகாட்டுதல்

**அதிகாரங்கள் :** மேலாண்மை ஆகியவை உறுப்பினர்களிடம் இருக்கும். இவ்உறுப்பினர்கள் அவை வாரியத்தின் எல்லா அதிகாரங்களையும் பெற்று பணிகளை நிரை வேற்றுவோம்
1.வாரியத்தின் சபைத்தலைவரையும் மற்ற உறுப்பினர்களையும் அப்பொறுப்பில் இருந்து நீக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.
2.மத்திய அரசு நிதிஉதவி செய்வதுடன் வாரியத்திற்கு அவ்வபொழுது தேவைப்படும் மானியங்களையும் வழங்குகிறது.
3.செபின் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்கும் பொழுது அவற்றிகான அனைகலை வழங்க மத்திய அரசுக்கு உரிமை உண்டு.வாரிம் தவறுதல் செய்யும் பொழுது அவற்றை விலக்கி சரிசெய்து நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.

**பணிகள் :**

1.பங்குமாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துதல்.
2.இடைத்தரகர்களான பங்கு தரகர்கள் துணைத்தரகர்கள் வெளியிட்டு வங்கியர் ஒப்புறுதியாளர்கள் மற்றம் பத்திர சந்தையுடன் தொடர்புடைய மற்ற இடைத்தரகர்களின் செயல்பாடுகளை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்ததல்
3.பரஸ்பர நிதியங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களை பதிவு செய்து ஒழுங்கு படுத்ததல்.
4.சுயகட்டுப்பாடு நிறுவனங்களை தோற்றுவித்தலும் ஒழுங்குபடுத்ததலும்
5.பத்திர சந்தையில் மோசடியான மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளை தடை செய்தல்
6.முதலீட்டாளர்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தர் மற்றம் இடைத்தரகர்களுக்கான பயிர்ச்சியளித்தல்
7.பத்திரங்களுக்கான உள்வணிகத்தை தடைசெய்தல்
8.பங்குகளை கணிசமான அளவில் வாங்கி நிறுமங்களை எடுத்தக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்ததல்
9.பங்குமாற்றகங்களிலிருந்து ஆகியவற்றின் அமைப்பு போன்ற விவரங்கள் பெறுவது பங்கு மற்றகங்களின் பரிசோதனை செய்தல் விசாரணை மற்றும் தணிக்கை செய்தல்
10.மத்திய அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பணியிணை செய்தல்

**66)அ)கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகள் :**

**1.கூட்டாளிகளின் உடன்பாட்டால் (பிரிவு 40):** ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கபடுகிறது கலைக்கப்படுகிறது.அனைத்து கூட்டாளியின் சம்மதத்தின் பெயரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம்ட கலைக்கபடலாம்.

**2.கட்டாய கலைப்பு (பிரிவு 41)** அனைத்து கூட்டாளிகளின் நொடிப்பு நிலையோ அல்லது ஒருவர் தவிர மற்ற எல்லா கூட்டாளிகள் நொடிப்பு நிலையோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.மேலும் செய்து வரும் தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.

**3.சில நிகழ்சிகள் நிகழ்வுறும் போது கலைப்பு (பிரிவு 42):** கூட்டாளியின் இறப்பு கூட்டாளியின் நொடிப்பு குறைந்த காலத்திற்கான கூட்டாண்மை – அந்தக் காலம் முடிந்தவுடனும் குறிப்பிட்ட தொழில் - அந்த தொழில் முடிந்தவுடன்.

**4.அறிவிக்கையால் விருப்பமுறிக் கூட்டாண்மை பிரிவு – 43** :விருப்பமுறிக் கூட்டாண்மையில் ஒரு கூட்டாளி நிறுவனத்தை கலைக்கும் தனது விருப்பத்தை அறிவிக்கை மூலம் கொடுத்தால்' நிறுவனம் கலைவுறும்.

**5.நீதி மன்றத்தால் பிரிவு - 44:**கூட்டாளி எவரேனும் ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்வதன் மூலம் நிறுவனத்தை கலைக்க நிதிமன்றம் ஆணையை பிறப்பிக்கலாம்.

**(1)கூட்டாளி ஒருவரின் பித்த நிலை** :கூட்டாளி ஒருவரின் பித்த நிலையை அடைந்தால் நீதி மன்றம் கலைப்பதற்கான ஆணையை பிறப்பிக்கலாம்.

**(2)நிலையான திறமை இன்மை** :கூட்டாளி ஒருவர் நிரந்தரமாக தொழில் செய்யும் திறமையை இழந்திருந்தால்

**(3)கூட்டாளியின் தீய நடத்தை** :கூட்டாளி ஒருவர் ஒழுக்கக் கேடான குற்றத்தை செய்திருப்பின்

**(4)உரிமை மாற்றம்** :கூட்டாளி ஒருவர் தனது உரிமை நலனை பிறருக்கு மாற்றி கொடுத்தால்

**(5)தொடர்ந்து உடன்பாட்டை மீறுகை** :கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக்கொண்டிருந்தால்

**(6)தொடர் நட்டம்** :கூட்டாண்மை நிறுவனத்தில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டால் கலைக்க நேரிடும்.

**66.ஆ)தனி வரையறு நிறுமம் பொது வரையறு நிறுமம் வேறுபாடு :**

| வ.எண் | அடிப்படை | தனி நிறுமம் | பொது நிறுமம் |
|---|---|---|---|
| 1 | உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்தது 2 அதிகபட்சம் 50 | குறைந்தது 7 உச்ச அளவிற்கு வரையறை இல்லை |
| 2. | பெயர் | இறுதியில் தனிவரையறுக்கப்பட்டது.என்று முடிவடைய வேண்டும். | வரையறுக்கப்பட்டது என்ற சொல்லுடன் முடிவடைய வேண்டும். |
| 3. | செயல்முறை விதிகள் | தான் சொந்தமாக தயாரித்த செயல் நடைமுறை விதிகளை நிறுமப்பதிவாளரிடம் சமர்பிக்க வேண்டும். | செயல் நடைமுறை விதிகளை தாயாரிக்காத நிறுமங்கள் நிறுமச்சட்டத்தில் உள்ள மாதிரி அட்டவணை –அ பின்பற்ற வேண்டும். |
| 4. | குறுமபங்கொப்பம் | அவசியமில்லை | கட்டாயமாக்கப்பட்டுள்து |
| 5 | இயக்குநர்கள் | குறைந்தது 2 இயக்குநர்கள் தேவை | குறைந்தது 3 இயக்குநர்கள் தேவை |
| 6. | சட்ட முறை கூட்டம் | அவசியமில்லை | 6மாதத்திற்குள் கூட்ட வேண்டும். |
| 7. | தகுதிப்பங்குகள் | இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட தகுதிப்பங்குகள் பெறவேண்டிய அவசியமில்லை | இயக்குநர்கள் தகுதிப்பங்குகளை பெற்றிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 8. | குறைவெண் | கூட்டம் செல்லத்தக் கதாக அமைய கூட்டத்திற்கு வருகை தர வேண்டி குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 | குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 |
| 9. | பங்கு விற்பனை | பொது மக்களுக்கு பங்கு விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது | பங்கு விற்பனை செய்யலாம் |
| 10. | இயக்குநர்களின் ஓய்வு | 65 வயதுக்கு மேலும் இயக்குநராக பணியாற்றலாம் | 65 வயதில் ஓய்வு பெற வேண்டும். |

67.அ.ஒரு நிறுமச்செயலரின் பணிகளும் கடமைகளும் விவரி:

**நிறுமச் செயலரின் பணிகள்:**

**1. மேற்பார்வையும் கட்டுப்பாடும் நிறுமச்செயலர் தன் கீழுள்ள துறையின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கிறார். நிறுமத்தின்முதன்மை அதிகாரி என்ற முறையில் உண்மைச் சான்றென உறுதி அளிக்க வேண்டிய ஆவணங்களில் கையொப்பமிடுதல் இவரின் பணியாகும்.**

**2. கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல் கூட்டம், நாள், இடம், நேரம் முதலியவற்றை முடிவு செய்தும், நிகழ்ச்சி நிரலை தயாரித்தும் அனுப்புகிறார் கூட்டம் சிறப்பாக நடைறெ அனைத்து பணிகளையும் செய்கிறார்.**

**3. கூட்டத்தின் செயல்பாடுகள் கூட்டத்தின் செயல்பாடுகள், அமைப்பு முறையேடு, செயல்முறை விதிகளுக்கு முரண்படாமல் பார்த்துக் கொள்கிறார்.**

**4. பங்குநர்களின் நலன்காத்தல்**

**பங்குநர்களின் நலன் சிறக்கும் வகையில் செயலர் பணி செய்கிறார். கூட்டங்களில் கடைபிடிக்க வேண்டிய சடங்குகள் அனைத்தையும் பின்பற்றிடவும், நிகழ்ச்சி குறிப்பேட்டில் அனைத்தையும் பதிவு செய்யும் பணியினையும் செய்கிறார்.**

**5. பங்குநர்களின் ஐயம் நீக்குதல் பங்குநர் ஏழுப்பும் வினாக்களுக்கு, காலங்கடத்தாமலும், பண்புடனும் பதிலளிக்கிறார் இரகசியங்களைத் தெரிவிக்காமலும், தெரிவிக்க வேண்டியவற்றை தெரிவித்தும் பங்குநர்கள் மனநிறைவு பெறும் வகையில் செயலாற்றுகிறார்.**

**6. பணிகளை ஒருங்கிணைத்தல் இயக்குநர் அவையுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு, பல்வேறு துறைகளில் பணிகளை ஒருங்கிணைக்கிறார்.**

**7. நிறுமத்தில் சுமூக உறவு எழியர்கள், தொழிலாளர்கள், இயக்குநர்கள், நிறுமத்துடன் தொடர்பு கொண்ட வெளிநபர்களுடன் சுமூக உறவு நிலவ உழைக்கிறார்.**

**8. ஊழியர் நலன் தங்களின் ஊழியர்களின் நம்பிக்கையை வளர்த்து அவர்களின் உளமார்ந்த ஒத்துழைப்பை செயலர் பெறுகிறார்.**

**நிறுமச் செயலரின் கடமைகள்**

**ஆ) சட்டமுறை கடமைகள்** 1. **உண்மையெனச் சான்றளிக்க வேண்டிய ஆவணத்தில் கையொப்பமிடல்**

2. **தகவலறிக்கைக்கு மாற்றறிக்கையை தாக்கல் செய்தல்**

3. **ஒதுக்கீடு செய்த பங்கு சான்றிதழை வழங்கல்**

4. **பதிவு அலுவலகம் உள்ள இடம் குறித்த அறிக்கையை தாக்கல் செய்தல்.**

5. **ஆண்டு அறிக்கையில் கையொப்பமிடல்**

6. **உறுப்பினர்களக்கு பொதுக்கூட்ட அறிக்கையை அனுப்புதல்**

7. **நிகழ்ச்சி குறிப்புகளை தயார் செய்தல்**

8.**சட்டமுறை ஏடுகளை உரிய முறையில் வைத்திருத்தல்.**

**இ) பொதுக் கடமைகள்**

1. **தன் கடமைகளை கவனத்துடனும், நேர்மையுடனும் செய்தல், தன் அதிகார ஏல்லையை மீறாத செயல்பட வேண்டும்.**

2. **இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தல் வேண்டும்.**

**67.ஆ)கூட்டுறவுச்சங்கள் ஏதேனும்5 விளக்கத்துடன்**

**நாணய சங்கம்** : 1. வேளாண்மை கடன் சங்கம் 2. வேளாண்மை கடன் சாராசங்கம்

**வேளாண்மை கடன் சங்கம்** 1. கிராமப்புற கடன் சங்கம் 2. பிரதம சங்கங்கள்

**வேளாண்மை கடன் சாரா சங்கம்**

1.நகர வங்கிகள் 2. பணியாளர் சங்கம் 3. தொழிலாளிக் கடன் சங்கங்கள்

**நாணயம் சாரா சங்கங்கள் :** 1.வேளாண்மை சாரா கடன் சங்கங்கள் 2. வேளாண்மை சாரா கடன் சாராத சங்கங்கள்

**வேளாண்மை சாரா கடன் சங்கங்கள்**

1.கூட்டறவு சந்தையிடுதல் 2.கூட்டுறவு பண்ணைகள் 3.தொழிற்சாலை கூட்டுறவு

**வேளாண்மை சாரா கடன் சாராத சங்கங்கள்**

1.நுகர்வோர் கூட்டுறவு 2.உற்பத்தியாளர் கூட்டுறவு 3.கூட்டுறவு வீட்டு வசதி 4.கூட்டுறவு பண்டகசாலை.